## தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்துகொண்ட பழனிசாமியின் அடிமை ஆட்சி அல்ல இது!

# சட்டம் ஒழுங்கைச் சீரழித்த பழனிசாமிக்கு, திராவிட மாடல் ஆட்சியைக் குறை சொல்ல அருகதை இல்லை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, மே 10 -**

**“தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டைத் தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்ட எடுபிடி பழனிசாமியின் அடிமை ஆட்சி அல்ல இது. சட்டம் ஒழுங்கைச் சீரழித்துக் கேடுகெட்ட அடிமை ஆட்சியை நடத்திய பழனி சாமிக்கு, ‘திராவிட மாடல்’ ஆட்சியைக் குற்றம் சொல்வதற்கு அருகதை இல்லை” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

1.15 கோடி மகளிருக்குக் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை!

ரூ.10,160.63 கோடியில் 662 கோடி முறை பெண்கள் விடியல் பயணம்!

மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் மூலம் ரூ.721கோடி வழங்கப்பட்டு 4,83,000 கல்லூரி மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்!

இவ்வாறு மக்கள் நலத் திட்டங்கள் மூலம் திராவிட மாடல் அரசு பெண்களிடம் பெற்றிருக்கும் அபரிமிதமான செல்வாக்கை கண்டு என்ன செய்வதென்று தெரியாமல், விழி பிதுங்கி, தனது டெல்லி எஜமானர்களின் வழியில் பொய்களையும் அவதூறுகளையும் அள்ளிக் கொண்டு வந்து அரசியல் செய்யப் பார்க்கிறார் பழனிசாமி.

**விரக்தியின் உச்சத்தில் பழனிசாமி!**

நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டு மக்களிடம் பெற்றிருக்கும் அபரிமிதமான செல்வாக்கைக் கண்டு விரக்தியின் உச்சத்திற்கே சென்றிருக்கிறார் பழனிசாமி!

தி.மு.க. மக்களிடம் அடைந்துள்ள செல்வாக்கால், 2026 தேர்தலில் மட்டுமல்ல, இனி எந்தத் தேர்தலிலும் அ.தி.மு.க.விற்கு தோல்விதான் என்னும் வயிற்றெரிச்சலில், வடிகட்டிய பொய்களைத் திரட்டி புலம்பியிருக்கிறார் புலம்பல் சாமி!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது நிர்வாகத் திறனால் இன்றைக்கு இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறார். பழனிசாமி ஆட்சியில் 2019 - 2020 ஆண்டில் 3.25 விழுக்காடு என அதல பாதாளத்தில் விழுந்துக் கிடந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2024 - 25 ஆம் ஆண்டில் 9.69 விழுக்காடாக உயர்த்தி இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக உயர்த்தியுள்ளார். இந்த திராவிட மாடல் ஆட்சியைப் பார்த்துக் குற்றம் சொல்வதற்குக் கேடுகெட்ட ஆட்சி நடத்திய பழனிசாமிக்கு அருகதை இல்லை.

**செம்பரம்பாக்கம் ஏரியை திறந்துவிட்டு 200க்கும் மேற்பட்ட உயிர்கள் பலி!**

அ.தி.மு.க. ஆட்சியின் கையாலாகாத்தனத்திற்குச் செம்பரம்பாக்கம் ஏரியை திறந்து விட்டு 200க்கும் மேற்பட்ட உயிர்களைப் பறித்த கொடூரமே சான்று! பழனிசாமியின் ஆட்சியில் சென்னை மாநகரம் பருவ மழைக் காலத்தில் மிதந்து தத்தளித்தது என்பதைப் பாதக ஆட்சி நடத்திய பழனிசாமி மறக்கலாம்! மக்கள் மறக்கமாட்டார்கள்!

மழைநீர் வடிகால் பணிகளில் திராவிட மாடல் அரசின் பணிகள் சிறப்பாக இருந்தன என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். சென்னையில் எவ்வளவு கனமழை பெய்தபோதும் எந்த



இடத்திலும் நீர் தேங்காத வகையில் உட்கட்டமைப்பை உயர்த்தியிருக்கி றோம் என்பது உலகிற்குத் தெரியும். வெறுப்பில் பிதற்றி திரியும் பழனிசாமியின் காமாலைக் கண்களுக்குத் தெரியாமல் போவதில் வியப்பில்லை.

ஆவடி காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் ஒருவர் பெண் ஒருவருக்குப் பாலியல் தொந்தரவு அளித்த விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் அற்ப நோக்கில், அந்தக் காவலரை நேற்றைய தினமே உடனடியாகக் கைது செய்து நடவடிக்கை எடுத்ததை மறைத்து விட்டு, பேட்டி என்ற பெயரில் அரசியல் நாடகமாடிச் சென்றுள்ளார் அற்ப பேர்வழி பழனிச்சாமி.

இப்படி கதை கதையாக அடித்து விட்டு அதை தமிழ்நாட்டு மக்கள் நம்புவார்கள் என எதிர்பார்ப்பது முட்டாள்தனம் இல்லையா? எங்கள் காதுகளும் பாவம் இல்லையா?

**“எவராக இருந்தாலும்” சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது!**

தமிழ்நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளைக் கைது செய்யாமல் இழுத்தடித்த இழிவான ஆட்சியல்ல இது. பெண்களுக்கு எதிரான குற்றத்தில் ஈடுபடுபவர் “எவராக இருந்தாலும்” சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாத வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி இது.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு என்றால் என்ன? என்று கேட்கிற அளவிற்குச் சட்டம் ஒழுங்கு மரணப் படுக்கையில் இருந்தது.

**தமிழ்நாட்டை உறைய வைத்த பொள்ளாச்சி கொடூரம்!**

தமிழ்நாட்டின் மனசாட்சியை உறைய வைத்த பொள்ளாச்சி கொடூரம்! பேராசிரியரே மாணவிகளைப் பாலியல் தொழிலுக்குள் தள்ளப் பார்த்த நிர்மலாதேவி விவகாரம்! சென்னை வில்லிவாக்கத்தில் 10 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த சிறப்புக் காவல் உதவி ஆய்வாளர்!

இவ்வாறு பட்டியலிட ஆரம்பித்தால் பக்கங்கள் பத்தாது, தமிழ்நாட்டுப் பெண்களைப் பாதுகாப்பில்லாமல் அச்சுறுத்தல் மிக்கச் சூழலில் வைத்திருந்ததுதான் அ.தி.மு.க.வின் அவல ஆட்சி.

பரமக்குடி இமானுவேல் சேகரன் குருபூஜையில் துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொலை! காவல் ஆய்வாளர் ஆல்பில் சுதன் சமூக விரோதிகளால் குத்திக் கொலை! மரக்காணத்தில் நடந்த கலவரத்தில் பொதுச் சொத்துகள் சேதம், தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகள் சூறையாடி தீ வைப்பு! தூத்துக்குடி கீழ வல்லநாட்டில் கல்லூரி முதல்வர் சுரேஷ் கல்லூரி வளாகத்திலேயே வெட்டிக் கொலை! இளம் பெண் சுவாதி பட்டப் பகலில் ரெயில்வே நிலையத்தில் வெட்டிக் கொலை!

**ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் மரணம்!**

கூடங்குளம் போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் மீது ஈவிரக்க மற்ற அடக்குமுறைகள்! சாதி ஆணவக் கொலைகள்! சல்லிக் கட்டுப் போராட்டத்தில் காவல் துறையே வாகனங்களுக்குத் தீவைத்த அவலம்! நாட்டையே அதிர்ச்சியில் உறைய வைத்த சாத்தன் குளம் தந்தை மகன் காவல் நிலைய மரணம்! மிகக் கொடூரமாக நடத்தப்பட்ட ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் மரணம்!

இவ்வாறு சட்டம் ஒழுங்கை சீரழித்துக் கேடுகெட்ட அடிமை ஆட்சியைப் நடத்திய பழனிசாமி, திராவிட மாடல் அரசை பார்த்துக் குற்றம் சொல்வதற்கு தகுதி இல்லை. பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் சீரழிந்து போயிருந்த சட்டம் ஒழுங்கைச் சீர்படுத்தி நிலையான ஆட்சியை வழங்கி வருகிறது திராவிட மாடல் அரசு!

தமிழ்நாடு முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சிறப்பாகக் கையாளப்பட்டு வருகிறது. குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்படுகின்றன. குற்றவாளிகள் உடனடியாகத் தண்டிக்கப்படுகிறார்கள்.

கடந்த 4 ஆண்டுக் காலத் தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து தமிழ்நாட்டில் குற்ற நடவடிக்கைகள் குறைந்து வருகின்றன. கடந்த 12 ஆண்டுகளில் 2024 ஆம் ஆண்டில்தான் கொலை சம்பவங்கள் குறைவாக நடந்திருக்கின்றன. கொலை குற்ற விகிதம் ஒரு இலட்சம் மக்களுக்கு தேசிய சராசரி 2.2 என்றால், தமிழ்நாட்டில் அது 1.1 ஆகக் குறைந்திருக்கிறது.

**தி.மு.க. ஆட்சியில்தான் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படுகின்றன!**

அ.தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை விட மிகத் தீவிரமான நடவடிக்கைகள் தி.மு.க. ஆட்சியில்தான் உறுதியாகவும் விரைவாகவும் எடுக்கப்படுகின்றன.

அ.தி.மு.க. ஆட்சியில் அதிகபட்சமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ரவுடிகள் 1,929 பேர் என்றால், தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆண்டில் அதிகபட்சமாக 3,645 ரவுடிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். A மற்றும் A+ ரவுடிகளின் எண்ணிக்கை 50 விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

நான்காண்டு காலத் திராவிட மாடல் ஆட்சி மக்களிடம் பெற்றிருக்கும் அபரிமிதமான செல்வாக்கை கண்டு பொறுக்காமல் பிதற்றும் பழனிசாமியின் கபட நாடகங்கள் மக்களிடம் ஒருநாளும் வெற்றிப் பெறாது.

**‘திராவிட மாடல்’ ஆட்சியே மீண்டும் தொடரும்!**

சரித்திரம் போற்றும் சாதனைகளைத் தந்துள்ள நான்காண்டு திராவிட மாடல் ஆட்சியே மீண்டும் தொடரப் போகிறது என்ற உண்மையை ஏற்க முடியாமல் அவதூறுகளை அள்ளி வீசி வரும் பழனிசாமியின் முகத்தில் தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் தோற்கடித்துக் கரியைப் பூசப் போவது உறுதி!

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# தமிழ்நாடு அமைச்சர்கள் இலாகா மாற்றம்!

## ஆளுநர் மாளிகை அறிவிப்பு!

சென்னை, மே 10 –

தமிழ்நாடு அமைச்சரவையில் இலாகா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு சட்டத் துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டத் துறை அமைச்சராக இருந்த எஸ்.ரகுபதிக்கு இயற்கை வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையை ஏற்று ஆளுநர் மாளிகை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் குமார் கே.முருகேஷ் தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கலந்துகொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடத்தில் எடுத்துக் கூறி தெருமுனைப் பிரச்சாரம் செய்வது குறித்தும், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தினர் களப்பணியாற்றுவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி பேசினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவகுமார், மா.சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, ஆ.செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, க.சின்னையன், செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, மு.சுப்பிரமணியன், இரா.சேகரன், ஜி.சண்முகம், கே.சந்திரசேகர், சு.குணசேகரன், ப.செங்கோட்டையன், தோப்பு டி.சதாசிவம், வ.கதிர்வேல், விஜயகுமார், மு.சி.முத்துக்குமார், மேயர் சு.நாகரத்தினம், குமாரவடிவேல், வி.சி.நடராஜன், வி.செல்வராஜ், பொ.ராமச்சந்திரன், அக்னி டி.சந்திரசேகரன், ஏ.முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமணகுமார், ஜெ.திருவாசகம், புகழன், ஸ்ரீதர், மணி, சிவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட

# விவசாய அங்கத்தினர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் மேற்கொண்டார்!

*கள்ளக்குறிச்சி, மே 10 -*

சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குட்பட்ட கரும்பு விவசாய அங்கத்தினர்களின் கரும்பு நடவு வயல்களை கள ஆய்வு செய்த பின்பு விவசாய அங்கத்தினர்களுடன் கலந்துரையாடினார்.

அதன் விபரம் வருமாறு:

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 19.5.1961 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 12.02.1967 ஆம் ஆண்டு, தினசரி அரவைத்திறனாக 1200 மெ. டன்கள் ஆண்டு அரவைத் திறனுடன் துவங்கப் பட்டது. 1977-78 ஆம் ஆண்டு தினசரி அரவைத்திறனாக 2000 மெ.டன்கள் அரவைத்திறனுடன் மேம்படுத்தப்பட்டது. பின்னர் 1995-96 ஆம் ஆண்டில் தினசரி அரவைத்திறனாக 2500 மெ. டன்கள் அரவைதிறனாக மேம்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த சர்க்கரை ஆலை கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மூங்கில்துறைப்பட்டு பகுதியில் 125 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலையின் விவகார எல்லைப்பகுதி கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

இவ்வாலையின் மொத்த கரும்பு விவசாய அங்கத்தினர்கள் 37870 மற்றும் இவர்களில் சராசரியாக 5500 விவசாய அங்கத்தினர்கள் கரும்பு சாகுபடி செய்து ஆலை அரவைக்கு கரும்பு அனுப்பி வருகிறார்கள்.

கடந்த 2024-25ஆம் அரவைப் பருவத்தில் 3,02,611 மெ.டன்கள் அரவை செய்து 8.28 சதவீத சர்க்கரை கட்டுமானத்தை எய்தியுள்ளது. மேலும் எதிர்வரும் சிறப்பு அரவைப் பருவத்தில் 80,000 மெ. டன்கள் அரவை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது, இதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது. அரவை செய்யப் பட்ட கரும்பிற்கு கரும்பு கிரயத்தொகையாக டன் ஒன்றுக்கு 3151.00 வீதம் ரூ. 95.35 கோடி நிலுவையின்றி விவசாய அங்கத்தினர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு கடந்த 2023-24ஆம் அரவைப் பருவத்தில் ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த அங்கத்தினர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு ஊக்கத் தொகை கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 215/ வீதம் வழங்கப்பட்டு அத்தொகையானது சம்பந்தப்பட்ட அங்கத்தினர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப் பட்டது. 2024-25ஆம் அரவைப் பருவத்திற்கு கரும்பு சப்ளை செய்த அங்கத்தினர்களுக்கு தமிழக அரசால் சிறப்பு ஊக்கத் தொகையாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 349/ அறிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் தமிழக அரசால் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை அங்கத்தினர்களுக்கு சுமார் 37.25 கோடி சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2024-25 பருவத்தில் ஆலைக்கு கரும்பு பதிவு செய்துள்ள அங்கத்தினர்களுக்கு தமிழக அரசின் மூலம் நடவு மான்யமாக மத்திய, மாநில அரசின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 78 இலட்சம் அங்கத்தினர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்திலேயே அதிக அளவு கரும்பு பதிவு செய்த சர்க்கரை ஆலையாக உள்ளது. மேலும் தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தின் (SISSTA) மூலம் வழங்கப்படும் விருதினை பெற்று வருகிறது.

ஆலையின் நடப்பு கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ள கரும்பு வயல்கள், அரசால் வழங்கப்பட்டுள்ள மானிய திட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள நிழல்வலை கூட நாற்று உற்பத்தியினையும், நடப்பு ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நமது ஆலைக்கு சுமார் 207 லட்சத்தில் அறிவிக்கப்பட்ட புதிய இயந்திரங்கள் நிறுவும் பணிக்ளையும், இணை மின் திட்ட பணிகள் மற்றும் ஆலையில் எத்தனால் தொழிற்சாலை அமைய உள்ள இடங்களையும் ஆய்வு மேற்கொண்டார்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில்துறைப்பட்டில் நடைபெற்ற மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:

ஆர்.இராஜேந்திரன், சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர், த. அன்பழகன், சர்க்கரைத்துறை இயக்குநர், பிரசாந்த், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர், வசந்தம் க.கார்த்திகேயன், ஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், டிமலையரசன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர், ஆலையின் செயலாட்சியர் கோ.யோக விஷ்ணு, இணைப்பதிவாளர்/செயலாட்சியர், கள்ளக்குறிச்சி I கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்., மூங்கில்துறைப்பட்டு, மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள் ஆலையின் உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், ஆலையின் தொழிற்சங்க பிரதிநிதிகள், ஆலை பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தற்காலிக தினக்கூலி தொழிலாளர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.